## வாக்காளர் பட்டியலில் 1.66 கோடி பெயர் நீக்கம்: உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்




**புதுடெல்லி:** வரும் ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைக்கு தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் வாக்காளர் பட்டியலில் பல இடங்களில் உள்ள ஒரேநபர்களின் பெயர்களைக் கண்டுபிடித்து நீக்க வேண்டும் என்று சம்விதான் பச்சாவோ டிரஸ்ட் என்ற அமைப்பு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் பொது நலன் மனு (பிஜஎல்) தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த மனு மீதான விசாரணை நடைபெற்றது. அப்போது தலைமைத் தேர்தல் ஆணையம் சார்பில் ஒரு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அதில் தேர்தல் ஆணையம் கூறியிருப்பதாவது: மக்களவைத் தேர்தலையொட்டி வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் முகாம்கள் நடத்தப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர்பட்டியலில் புதிதாக 2.68கோடி பேரின் பெயர்கள் சேர்க் கப்பட்டுள்ளன.

மேலும் 1.66 கோடி நபர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி நாட்டில் சுமார் 97 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

அசாம், மத்தியபிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், மிசோரம்,தெலங்கானா ஆகிய 6 மாநிலங்கள் தவிர்த்து வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டது. இந்தமாநிலங்களில் தேர்தல் நடந்ததால் அங்கு வாக்காளர் பட்டியலில்திருத்தம் மேற்கொள்ளப்பட வில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அப்போது தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், ‘‘வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நபர்களில் இறந்தவர்கள் விவரம், நிரந்தரமாக வீடு அல்லது ஊர்மாறியவர்கள் விவரம், பெயர்நீக்கப்பட்ட நபர்களின் விவரங்களை தனித்தனியாக தேர்தல் ஆணையம் தாக்கல் செய்ய வேண்டும்’’ என உத்தரவிட்டார்

## போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்களின் பட்டியலில் பெங்களூருவுக்கு 6-ம் இடம்



**பெங்களூரு:** உலகில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள நகரங்களின் பட்டியலில் கர்நாடக மாநில தலைநகரான பெங்களூரு ஆறாவது இடத்தில் உள்ளது.

உலகில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் ஜியோலொகேஷன் தொழில்நுட்ப அமைப்பு 55 நாடுகளில் உள்ள 387 நகரங்களில் ஆய்வு நடத்தி முடிவுகளை வெளியிட்டது. அதில் உலகில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்களின் பட்டியலில் இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இங்கு அலுவலக

நேரத்தில் 10 கிலோமீட்டர் தூரத்தை கடக்க 35 நிமிடங்கள் ஆகின்றன. இந்த வரிசையில் அயர்லாந்து தலைநகர் டப்ளின் 2-ம் இடத்தில் உள்ளது.

கடந்த 2022-ல் 2-ம் இடத்தில் இருந்த பெங்களூரு தற்போது 6-ம் இடத்தில் உள்ளது. அலுவலக நேரத்தில் 10 கிலோமீட்டர் தூரம் பயணிக்க 28 நிமிடங்களும் 10 விநாடிகளும் செலவாகிறது. அலுவலக நேரத்தில் சுமார் 10 கிலோமீட்டர் பயணிப்பவர்கள் மட்டும் ஓர் ஆண்டுக்குச் செல விடும் நேரம் சுமார் 129 மணி நேரம் என கணக்கிடப்பட்டுள்ளது.

இதேபோல பெங்களூருவில் போக்குவரத்து நெரிசல் மிகுந்தநேரத்தில் பெட்ரோல் பயன்படுத்தும் கார்களில் இருந்து மட்டும் சுமார் 974 கிலோ கார்பன் மாசு வெளியேற்றப்படுவது இந்த ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது

## அதானி நிறுவனத்தின் சோலார் நிலையம் மூலம் 840 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி



ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 2,500 ஏக்கர் பரப்பளவில் அதானி நிறுவனம் அமைத்துள்ள பிரம்மாண்ட சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்.

**கமுதி:** கமுதியில் அமைக்கப்பட்டுள்ள அதானி நிறுவனத்தின் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் மூலம் 848 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி

செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 77 லட்சம் டன் கார்பன்-டை-ஆக்சைடு வெளியேறுவது தடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுற்றுச்சூழல் மாசுவை குறைக்க, மத்திய அரசு பசுமை எரிசக்தியை ஊக்குவித்து வருகிறது. குறிப்பாக, சூரியசக்தி, காற்றாலை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், அதானி நிறுவனம் தமிழகத்தில் ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அதானி கிரீன் எனர்ஜி என்ற சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. சுமார் 2,500 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம், 648 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

இந்த மின் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து, அதன் தலைமை அதிகாரி ஆர்.ஆராவமுதன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த மின்நிலையம் அமைக்கும் பணி 2015-ல் தொடங்கப்பட்டது. 2016-ல் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா இந்நிறுவனத்தை திறந்துவைத்தார். சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்ய 25 லட்சம் சூரியஒளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 648 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழக மின்வாரியம் கொள்முதல் செய்கிறது. இதற்காக மின் வாரியத்துடன் 25 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த மின் நிலையத்தில் தினமும் 30 லட்சம் யூனிட் சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதுவரை 840 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்ய வெப்பம் தேவையில்லை. சூரிய ஒளிதான் தேவை. இப்பகுதியில் அதிக அளவு சூரியஒளி கிடைக்கிறது. ஆண்டுக்கு 200 நாட்கள் வரை சூரியஒளி கிடைக்கிறது. குறிப்பாக, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அதிக சூரிய ஒளி கிடைப்பதால், மின் உற்பத்தியும் அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது.

சூரியஒளி தகடுகள் மீது தூசி படர்ந்தால், சூரியஒளி மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு குறையும். எனவே, ஆண்டுதோறும் 7 முறை இந்த தகடுகள்

சுத்தம் செய்யப்படும். ஒரு தகட்டை தூய்மைப்படுத்த 300 மில்லிலிட்டர் தண்ணீர் தேவைப்படும். இந்த மின் நிலையத்தால் 77 லட்சம் டன் கார்பன்-டை-ஆக்சைடு வெளியேற்றம் தடுக்கப்பட்டுள்ளது.

**2.64 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம்:** மின் உற்பத்தி நிலையத்தின் செயல்திறன் 17 சதவீதம் இருந்தாலே சிறப்பானது. ஆனால், சிறந்த பராமரிப்பு பணியால், செயல்திறன் 19 சதவீதமாக உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம் 2.64 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும்.

உலகில் ஒரே இடத்தில் ஒரு நிறுவனம் 648 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி நிலையத்தை அமைத்ததில்லை. அந்த வகையில், அதானி நிறுவனம் மட்டுமே கமுதியில் இந்த மின் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஆராவமுதன் கூறினார்.

## ஜவுளிப் பொருட்களுக்கான ஏற்றுமதி சார்ந்த திட்டம் 2026 மார்ச் வரை நீட்டிப்பு - சைமா வரவேற்பு

**கோவை:** ஆயத்த ஆடை, வீட்டு உபயோக ஜவுளிப் பொருட்களுக்கான ஏற்றுமதி சார்ந்த ‘ஆர்ஓஎஸ்டிஎல்’ திட்டத்தை 2026 மார்ச் வரை நீட்டிப்பு செய்துள்ள மத்திய அரசின் நடவடிக்கைக்கு தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் ( சைமா ) வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து சைமா தலைவர் சுந்தர ராமன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் சுமார் 8 சதவீதம் அளவில் ஜவுளித் துறை பங்காற்றி வருகிறது. நாட்டின் ஜவுளி ஏற்றுமதி 35 முதல் 37 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவில் தேக்கமடைந்துள்ளது. கரோனாவின் இரண்டாவது அலைக்கு பின் உலக நாடுகளில் திடீரென ஏற்பட்ட தேவை காரணமாக கடந்த 2021-22-ம் நிதியாண்டில் நாட்டின் ஜவுளி ஏற்றுமதி கணிசமாக உயர்ந்தது. புதிய திட்டங்கள் மற்றும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

உலக பொருளாதார அரங்கில் நமது நாட்டினருக்கு ஒரு சமதளத்தை உருவாக்கி ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் உள்ளடங்கியுள்ள மாநில மற்றும் மத்திய வரிகளை திருப்பிச் செலுத்த ‘ஆர்ஓஎஸ்டிஎல்’ என்ற திட்டத்தை 2019-ம் ஆண்டு மார்ச் 7-ம் தேதி முதல் மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஆயத்த ஆடை மற்றும் வீட்டு உபயோக ஜவுளி பொருட்களுக்கு சலுகைகளை அளிக்கிறது. முதலில் இத்திட்டம் 2020-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை மட்டுமே செயல்பாட்டில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. பின் 2024 வரை நீட்டிக்கப்பட்டது.

தொழில் துறையினரின் கோரிக்கையை ஏற்று, தற்போது 2026-ம் ஆண்டு மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் இது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தொலை நோக்கு சிந்தனையுடன் அரசு எடுத்துள்ள இந்த முடிவு வரவேற்கத்தக்கது. இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது